தேதி 08.12.2024 நேரம் மாலை 6.10 மணி

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – செங்கேணி பழனி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ராஜஸ்தான், அரியானா மாநிலங்களுக்கு செல்ல உள்ளார்.
- எல்லையை பாதுகாப்பதிலும், ஊடுருவலை தடுப்பதிலும் தீவிரவாதத்தை கையாள்வதிலும் எல்லை பாதுகாப்பு படையினரின் பங்கு மகத்தானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
- 3 நாள் அரசு முறை பயணமாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று முதல் ரஷ்யா செல்ல உள்ளார்.
- வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய புதுச்சேரி வந்துள்ள மத்திய குழுவினர் இன்று நகரம மற்றும் கிராமங்களில் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்

<u>பிரதமர் (16)</u>

மேம்படுத்தப்பட்ட இணைப்பு, டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் உள் கட்டமைப்பில் முதலீடு ஆகியவற்றின் மூலம் வடகிழக்கு மாநிலங்களின் குறிப்பிடத் தக்க வளர்ச்சியை பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டி உள்ளார். மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா எழுதிய வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கு வடகிழக்கு மாநிலங்களின் பங்கு முக்கிய உதவியாக உள்ளது என்ற கட்டுரையை திரு மோடி இன்று தமது எக்ஸ் தள பதிவில் குறிப்பிட்டுள்ளார். வடகிழக்கின் துடிப்பான ஜவுளித்துறை, சுற்றுலா வாய்ப்புகள் மற்றும் பாரம்பரிய கைவினை திறன் ஆகியவற்றை கொண்டாடும் அஷ்டலட்சுமி மகோற்சவையும் பிரதமர்

பாராட்டினார். அஷ்டலட்சுமி மகோற்சவ் புதுடெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் 3 நாள் கொண்டாடப்படுகிறது. இதில், அசாம், அருணாச்சல பிரதேசம், மேகாலயா, மணிப்பூர், நாகாலாந்து, மிசோராம், திரிபுரா மற்றும் 8 மாநிலங்களின் அழகு, பண்முக தன்மை போன்றவற்றை அடிப்படையாக கொண்டு நடத்தப்படுகிறது. விழாவில் 250 க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள், தனித்துவமான கைவினை பொருட்கள், கைத்தறிகள், விவசாய தயாரிப்புகள் போன்றவற்றை காட்சிப் படுத்தி உள்ளனர்.

<u>*மோடி பயணம்* (10)</u>

பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை ராஜஸ்தான், அரியானா மாநிலங்களுக்கு செல்ல உள்ளார். அவரது இந்த பயணத்தின் போது ஜெய்பூரில் நடைபெறும் கண்காட்சி, மற்றும் ரைசிங் ராஜஸ்தான் உலக முதலீட்டாளர் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்ற உள்ளார். நாளை பிற்பகல் பானிபட்டுக்கு செல்லும் பிரதமர் பீமாசகி யோஜனா திட்டத்தை தொடங்கி வைக்கிறார். இத்திட்டம் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயது முதல் 70 வயது வரையிலான பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியின் போது அரியானா மாநிலம் கர்னாலில் உள்ள மகாரானா பிரதாப் தோட்டக் கலை பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்திற்கும் பிரதமர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

<u>*மோடி-மஹோற்சவ்* (13)</u>

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறி வருவதாகவும், இதற்கு உந்து சக்தியாக மக்கள் மாற வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார். அவர் நேற்று மாலை அகமதாபாத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொளி காட்சி மூலம் பங்கேற்று பேசினார். வளர்ச்சியடைந்த பாரதம் - இளம் தலைவர்கள் உரையாடல் என்ற நிகழ்ச்சிக்கு அடுத்த மாதம் ஏற்பாடு செய்துள்ளதாக

அவர் தெரிவித்தார். வளர்ச்சியடைந்த பாரதம், இயற்கை விவசாயம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பெண் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தல் உள்ளிட்ட இயக்கத்தில் பங்கேற்கும்படி பொதுமக்களுக்கு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார். அனைத்து தலைவர்களும் ஒவ்வொரு ஆண்டும் ஒரு உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். விவசாயிகள், ரசாயணமற்ற விவசாயத்திற்கு ஒரு வருடம் அர்ப்பணிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

<u>*அமித் ஷா* 1(17)</u>

60 ஆண்டு காலமாக நாட்டின் முதல் எல்லை பாதுகாப்பை வலுப்படுத்த எல்லை பாதுகாப்பு படை செயல்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்தார். ஜோத்பூரில் இன்று நடைபெற்ற எல்லைப் பாதுகாப்பு படையின் 60 ஆவது நிறுவன தின விழாவில் பங்கேற்று பேசிய அவர், 1965 ஆம் ஆண்டு முதல் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை பாதுகாப்பதில் எல்லை பாதுகாப்பு படை மகத்தான பணியினை செய்துள்ளதாக தெரிவித்தார்.

இதனோடு மட்டும் அல்லாமல், ஊடுருவல், கள்ள நோட்டுகள், தீவிரவாதம் உள்ளிட்ட பல்வேறு பணிகளையும் எல்லைப்பாதுகாப்பு படை மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார். மோடி அரசு பதவி ஏற்ற பிறகு எல்லைப் பாதுகாப்பு படையை வலுப்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்காக பட்ஜெட்டில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஒதுக்கீடு செய்து வருவதாகவும், திரு அமித் ஷா கூறினார். எல்லையோர கிராமங்களில் வேலை வாய்ப்பு மற்றும் அடிப்படை வசதிகளையும் அரசு ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார். இதற்காக அதிர்வுறும் கிராம திட்டத்தை அரசு தொடங்கி உள்ளதாகவும், இத்திட்டம் சுமார் 3 ஆயிரம்

அமித் ஷா 2(4)

கிராமங்களில் சோதனை அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். முன்னதாக எல்லை பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பை அவர் பார்வையிட்டார். சிறந்த சேவை ஆற்றியமைக்காக வீரர்களுக்கு ஆவர் விருதுகளையும் வழங்கினார்.

சர்பானந்த சோனோவால் (12)

வரும் 2047 ஆம் ஆண்டிற்குள் உலகில் முன்னனி கடல் சார் நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுக்கும் என்று மத்திய துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் உறுதி அளித்துள்ளார். சென்னை துறைமுக பொறுப்பு கழகத்தின் கீழ் செயல்படும் காமராஜர் துறைமுகத்தின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டத்தில் நேற்று பங்கேற்று பேசிய அவர், காமராஜர் துறைமுகத்தின் வளர்ச்சி அனைத்து துறைமுகத்திற்கும் ஒரு முன் மாதிரியாக திகழ்வதாகவும், கடல் சார் துறையில் இந்தியா வளர்ந்த நாடாக திகழும் என்றும் தெரிவித்தார். தொடர்ந்து 582 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காமராஜர் துறைமுகத்தில் 4 ஆம் கட்ட தூர் வாரும் திட்டம், கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம், ஒருங்கிணைந்த கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையத்தின் அடிக்கல்லையும் அவர் நாட்டினார்.

ராஜ்நாத் சிங் (13)

3 நாள் அரசு முறை பயணமாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று முதல் ரஷ்யா செல்கிறார். இந்தியா-ரஷ்யா இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான 21 ஆவது கூட்டம் மாஸ்கோவில் நடைபெறுகிறது. இக் கூட்டத்தில், பாதுகாப்பு துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மற்றும் ரஷ்ய பிரதிநிதியான ஆன்ட்டோ பொலோசோவ் தலைமை ஏற்க உள்ளனர். ராணுவம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக் கூட்டத்தில் இரு

தலைவர்களும் முக்கிய ஆலோசனை நடத்துகின்றனர். இந்த பயணத்தின் ஒரு பகுதியாக நாளை ஏவுகணை கப்பலான ஐஎன்எஸ் துஷிலை பார்வையிட உள்ளார். தொடர்ந்து, 2 ஆம் உலகப் போரின் போது உயிரிழந்த சோவியத் வீரர்களை கௌரவிக்கும் வகையில் மாஸ்கோவில் உள்ள கல்லறையில் பாதுகாப்பு அமைச்சர் அஞ்சலி செலுத்த உள்ளார். தொடர்ந்து இந்திய சமூகத்தினருடனும் அவர் உரையாற்ற உள்ளார்.

<u>*ஜெய்சங்கர்* (16)</u>

அமெரிக்க டாலருக்கு நிகராக புதிய கரன்சியை தொடங்கும் திட்டம் ஏதும் இல்லை என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். கத்தார் தலைநகர் தோஹாவில் உரையாற்றிய அவர், அமெரிக்க டாலரை பலவீனப்படுத்தும் எண்ணம் பிரிக்ஸ் நாடுகளுக்கு இல்லை என்றும் தெரிவித்தார். இந்த விஷயத்தில் பிரிக்ஸ் நாடுகள் ஒரே மாதிரியான நிலைப்பாட்டை பகிர்ந்து கொள்ளவில்லை என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார். அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு டொனால்ட் டிரம்ப் பிரிக்ஸ் நாடுகள் பொது நாணயத்திற்கான திட்டங்களை கொண்டு சென்றால், 100 சதவிகித வரி விதிக்கப்படும் என்று கூறப்பட்ட நிலையில், டாக்டர் ஜெய்சங்கர் இந்த கருத்தினை தெரிவித்துள்ளார். தமது கத்தார் பயணத்தை முடித்துக் கொண்டு டாக்டர் ஜெய்சங்கர் 2 ஆம் கட்டமாக நேற்றிரவு பஹ்ரைனில் உள்ள மனமாவை அடைந்தார். அவரை பஹ்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் அப்துல் லத்திப் பின் ரஷித் அல் ஜையானி வரவேற்றார். இன்று பஹ்ரைனில் நடைபெறும் மனமா உரையாடலில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

*மத்திய குழு* 1(16)

வங்கக்கடலில் கடந்த மாதம் 23 ஆம் தேதி உருவான பெஞ்சல் புயல் கடந்த 30 ஆம் தேதி மாமல்லபுரத்திற்கும் -புதுச்சேரிக்கும் இடையே கரையை கடந்தது. அப்போது பலத்த சூறாவளியுடன் மழை பெய்தது. இந்த மழை காரணமாக 15 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிப்படைந்தன. இதனிடையே, வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழுவினர் இன்று புதுச்சேரி வந்துள்ளனர்.

நிதி ஆயோக்கில் உள்ள மத்திய இணை செயலாளர் திரு ராஜேஷ்குப்தா தலைமையிலான குழுவினர் இன்று புதுச்சேரியில் புயல் பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அவர்கள் புதுச்சேரி எல்லையான முள்ளோடை பகுதியில் உள்ள துணை மின் நிலையத்தில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தனர். பின்னர் இக்குழுவினர் 2 பிரிவாக பிரிந்து நகரம் மற்றும் கிராமங்களில் தங்களது ஆய்வு பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது, புயல் வெள்ள பாதிப்புக்கு கூடுதல் நிவாரணம் வழங்க கோரி திமுக வினர் மத்திய குழுவிடம் மனு அளித்தனர். புதுச்சேரியில் பெஞ்சல் புயல் காரணமாக ஒரே நாளில் 50 சென்டி மீட்டர் மழை கொட்டி

*மத்திய குழு* 2(8)

தீர்த்துள்ளதாகவும், இதன் காரணமாக நகரம் மற்றும் கிராமப் பகுதிகள் வெள்ளக் காடாக மாறியதாகவும், அதே நேரத்தில் சாத்தனூர், வீடூர் அணைகளில் உபரி நீர் திறப்பால் புதுச்சேரி பகுதி நீரில் மூழ்கி சாலைகள் துண்டிக்கப்பட்டு, போக்குவரத்து தடைப்பட்டதாகவும் மனுவில் தெரிவித்துள்ளனர்.

மத்திய குழுவினர் இன்று மாலை முதலமைச்சர் மற்றும் துணை நிலை ஆளுநரை சந்தித்து கலந்துரையாட உள்ளனர். மீண்டும் நாளை காலை

ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். ஆய்வை முடித்த பின்னர் அவர்கள் சென்னை புறப்பட்டு செல்ல உள்ளனர்.

<u>கவர்னர் ஓவியம்</u> (14)

புதுச்சேரியில் காமராஜர் ஓவிய கலைக் கூடம் சார்பில் சாலையோர ஓவியக் கண்காட்சி இன்று பாரதி பூங்காவில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று ஓவிய கண்காட்சியை தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திரு கலியபெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பேசிய துணை நிலை ஆளுநர், மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஒரு அர்புதமான வாய்ப்பு தரப்பட்டுள்ளதாக தெரிவித்தார். விழாவை ஏற்பாடு செய்திருந்த கலைகூடம் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள ஆதரவற்ற பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு இலவசமாக ஓவிய பயிற்சியை அளிப்பது பாராட்டத் தக்கது என்றும் அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் கலை வளர்ச்சிக்காக பங்களிப்பு செய்தவர்களுக்கு காமராஜர் விருது மற்றும் ஓவிய போட்டிகளில் வெற்றி வெற்றவர்களுக்கு பரிசுகளையும் துணை நிலை ஆளுநர் வழங்கினார்.